சைவ பரிபாலன சபை வெளியீடு
ஆரம்பம்: விரோதி ௵ (1889-ம் ஆனி மீ 28-ம் உ.

உ
சிவமயம்

செய்தித்தாளாகப் பதிவு பெற்றது

# இந்து சாதனம்

வெள்ளிக்கிழமை தோறும் வெளிவருவது

Hindu Organ

பிரதி விலை: சதம் 40

புத் 94 ] யாழ்ப்பாணம்:- ருதிரோற்காரி ௵ ஆவணி மீ 5, 12, 19, 26-8-83 வெள்ளிக்கிழமை [இல -22

# ஊரடங்கினும் சீர்முடங்காது பாரம்பரியத் திருவிழாக்கள்

## மாவையில், தெல்லி துர்க்கை தலத்தில், செல்வச்சந்நிதியில், நல்லூரில்

அடியார்களின் இடைசக் கற்பத்துக்குச் சாதனை இல் பெருந் திருத் தலங்களிற் எங்கும் நிகழ்ந்தன; நிகழ் கின்றன.

மாவையில் ஆரம்பமான இந்த மகத்தான சாதனை தெல்லி துர்க்கா தலத்திலே உச்சக் கட்டத்தில் உயர்ந் தது. சித்திரச் சப்பற அமைப்புப் புதிதாகத் தோன்றியது. தேர் உலாவும் தீர்த்த நிகழ்ச்சியும் சேர் சிர் நியமங்கள் தவ றுப் பெரும் பொலிவா யிருந்தன.

எங்கும் எப்பொழுதும் பத்தி உணர்ச்சி பொங்கி வழிய அற்புதமான அமை திச் சூழ்நிலை காணப்பட் டது. தீர்த்த நிகழ்ச்சிக ளுக்குரிய ஆரம்பக் கிரியை கள் தொடங்குவதற்குச் சற்று முன்பு வானினறு வழிந்தது தேவ தீர்த்தம். அடியார்கள் பரவசமாயி னர். அந்தணர்கள் புத்து ணர்ச்சி அடைந்தனர். தீர்த்த விழாவின் சீர்த்தி களைச் சொல்லவும் வேண் டுமோ?

நல்லூரில் எல்லாக் கரு மங்களும் நாட்டின் நிலை மைக்கேற்ப மிக நுணுக்க மாக நேர மாற்ற அமைப் பில் பாரம்பரியச் சீர்ப் பொலிவுடன் நிகழ்ந்து வரு கின்றன. அடியார்கள் நெஞ்சிற் சஞ்சலமின்றி முருகன் அடிபணிந்து நேர் த்தி முடித்துத் தங்கள் இல் லங்களுக்கு அமைதியாகத் திரும்பக்கூடிய நிர்வாக ஒழுங்கு பாராட்டுக்குரியது.

செல்வச் சந்நிதியில் என் றும் போலத் தெய்வீகச் சிறப்புடன் இயற்கைவனப் பும் இணைந்து வேற்குமா ரன் விழாக்கள் மிகவும் குளிர்ச்சியைக்கொடுத்தன.

ஏனைய ஆலயங்களில் எல்லாம் இவ்வாறு மா விழாக்கள் எவ்விதத்திலும் செவ்விதாக நடைபெற்று வருகின்றன.

மக்கள் மத்தியில் ஓர் புத் துணர்ச்சிப் பத்திச் செறிவு உண்டாகி வருவது குறிப் பிடத் தக்கது.

---

## துர்க்கா பரமேசுவரித் தூய தலத்தில் வேத வேள்வி வியன் கவின் விளங்க வைத்த சண்டி ஹோமம்

### ஆடாமல் அசையாமல் ஆயிரக்கணக்கான அடியார்கள் ஆனந்தமுற்றனர்

தேவசபை ஒன்று எவ் வாறு அமையுமென்பதைத் துர்க்காதேவித் திருத்தலத் தில் ஆனித் திங்கள் பதி னேழாம்நாள்முதல் மூன்று நாட்களாக நிகரற்ற நிறை நிறை காட்சியாக இருந்த ஹோமங்கள் தெற்றெனக் காட்டின. பெருந்திரளாக மக்கள்கூடும் இடங்களிலே அமைதி நிலவுவது அரிது. ஆனால் அதிசயிக்கத் தக்க முறையில் அடியார்கள் இந்த ஹோம நிகழ்ச்சிகளின் செம்மையில் நெகிழ்ந்து நின்று தம்மை மறந்து அமைந்திருந்த காட்சி ஒரு அநுபவமே.

ஹோம குண்டம் அதி விசேட அமைப்பு அதன் முன் உரிய பீடத்தில் ஒரு தோற்றம். சிவாசாரியர் என்றால் அவர் எவ்வாறு இருப்பார் என்பதை அன்று எல்லோரும் கண்டு இன்புறும்வகையிலே பேரா சிரியர் கைலாசநாதக் குருக்கள் தலைமைப்பீடத் தில் அமர்ந்தருள அக்கமும் பக்கமும் சிவாசாரியர்கள் தேவசபையாக வீற்றிருந்து ஓமம் வளர்க்க உற்ற தொனியில உரிய நெறி யில் வேதமந்திரங்கள்தேவி அர்ச்சனையாக உச்சரித் தது தெய்வீக உணர்ச்சி ஊக்குவித்த வண்ணம் சர்வ சாதகர் வியாகரண சிரோமணி சிவஸ்ரீ பூர்ண தியாகராஜாக் குருக்களும் சாதகாசாரியர்களாக சிவஸ்ரீ இலக்குமி நாராய ணக்குருக்களும் சிவஸ்ரீ ப. முத்துக்குமாரசுவாமிக் குருக்களும் வேத இசை எழுப்ப, ஹோமத்திருப் பணியிற் கலந்து கொண்டு கீரிமலை சிவஸ்ரீ கு நகுலேஸ் வரக் குருக்கள் மாவை சிவஸ்ரீ ஷண். இரத்தின சபாபதிக்குருக்கள் நயினை சிவஸ்ரீ சுவாமிநாத பரமே ஸ்வரக் குருக்கள் கோப் பாய் சிவஸ்ரீ க. சுப்பிரம ணியக் குருக்கள் நீர்வேலி பி. சந்திரசேகரக் குருக்கள் புங்குடுதீவு சிவஸ்ரீ இ. கெங்காதரக் குருக்கள், மட்டுவில் சோமசுந்தரக் குருக்கள் ஆனைக்கோட்டை சிவஸ்ரீ கைலாசநாதக் குரு க்கள் அளவை சிவஸ்ரீ ந. சிவசங்கரக் குருக்கள் சிவஸ்ரீ இ. விஸ்வேஸ்வரக் குருக்கள் கரணவாய் சிவஸ்ரீ கல்யாணசுந்தரக் குருக்கள், மாதகல் சிவஸ்ரீ கதிர் செல்லப்பாக் குருக் கள் ஆகியோரும் அர்க்கா தேவததானத்து சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக்குருக்க ளும் இறைபணியில் ஈடுபட வேத பாராயணம், துர்க்கா சுக்த ஸ்ரீசூக்த பாராயணம் லலிதா சஹஸ்ரநாமதிரிசதி நாம பாராயணம் சௌந் தர்ய லஹரி பாராயணம், தேவி தோத்திர பாராய ணம், அபிராமியந்தாதி பாராயணம் முறையாக முழங்கின.

இதிலே பிரம்மஸ்ரீ நாரா யணசாஸ்திரிகள், பிரமஸ்ரீ சிவராமகிருஷ்ண சாஸ்திரி கள் பிர்ம்மஸ்ரீ நாராயண சர்மா, பிரம்மஸ்ரீ தேவ சிகாமணி சர்மா, சிவஸ்ரீ சிவஸ்ரீ கா. இரத்தின் கைலாசநாதக் குருக்கள், சிவஸ்ரீ நா. மகாதேவக் குருக்கள் ஆகியோர் பங்கு கொண்டனர்.

வேத மந்திர ஒலியே யன்றி யாதும் அமைதி.

(வளர்ச்சி 2 ம் பக்கம்)

---

## இறைவன் தடுத்தாட்கொண்ட சுந்தரமூர்த்தி நாயனுர்

( ப. கணேசலிங்கம். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி )

"பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர் கோன் கழல போற்றி
ஆழி மிசைக் கன்மிதப்பில் அணைந்தபிரான் அடி போற்றி
வாழி திரு நாவலூர் வன்றொண்டர் பதம் போற்றி
ஊழிமலி திருவாதவூரர் திருத் தாள் போற்றி."

ஆலால சுந்தரர் சிவபெருமானுக்குக் கைலாயத் திலே அணுக்கத் தொண்டு புரிந்தவர். ஒருநாள், கை லாயபதிக்கு மாலைகட்டப் பூப்பறிப்பதற்காய்த் திரு நந்தவனஞ் சென்ற அவர், அங்கே பூக்கொய்து நின்ற அனிந்திதை, கமலினி என்ற பார்வதி தேவியாரின் தோழியரைக் கண்டு காதலுற்று மெய்மறந்து நின்றார். அவர்களும் அவ்வாறே நின்றுபின் இருபதியாரும் மனத்தைத் திருப்பிய வண்ணம் சற்றுகாலந்தாழ்த்துச் தம்மிடம் சேர்ந்தனர். "இதன் பொருட்டாக ஆலால சுந்தரரும், அனிந்திதை, கமலினியும் உலகின் இடையே பிறந்து இன்பந்துய்த்து மீளுக" எனக் கைலாயநாதர் கட்டளை இட்டருளினுர். அது காலை ஆலால சுந்தரர் இறைவனை நோக்கி, "எம்பெருமானே உலகில் யான் பிறந்து சம்சாரபந்தத்திலே ஆழ்ந்திடாமல் என்னைத் தடுத்தாண்டருளல் வேண்டும்" என்றுகுறையிரந்தார். அவ்வாறே இறைவன் அருளத் தமிழகத்தில் வந்து திரு அவதாரஞ் செய்தருளியவரே சுந்தரமூர்த்தி நாயனுர். கமலினி பரவையாராகவும் அனிந்திதை சங் கிலியாராகவும் உலகின் கண் தோன்றிச் சுந்தரமூர்த்தி நாயனுரின் துணைவியர் ஆயினர்.

திருமுனைப்பாடி நாட்டிலே திருநாவலூரிலே ஆதி சைவப்பிராமண குலத்தில் சடையனுர் மனைவியாகிய இசைஞானியாரிடத்தில் ஓர் அருந்தவப் புதல்வராய் நம்பியாரூரா பிறந்தார். நம்பியாரூரர் வீதியிற் சிறு தேருருட்டி விளையாடும் போது, அவ்வூர் அரனுகிய நரசிங்க முனையர் நம்பியாரூரரைக் கண்டு ஆசை கொண்டு சடையனுரிடம் கேட்டுப்அவரை பெற்று தமதுமாளிகையில் அபிமான புத்திரராய் வளர்த்து வந்தார்பிராமண வருணத்துக்குரிய கலைகளையும் ஐயம் திரிபுறக் கற்றுர். புத்திரர்

நம்பியாரூரர் மணஞ் செய்வதற்குரிய பருவத்தை யடைந்ததும் சடையனுர தம் மரபிற் கேற்றதாய், புத் தூரில் வாழ்கின்ற சடங்கவி சிவாசாரியாருடைய புதல்வியைத் திருமணம் பேசுவித்து நிச்சயித்தார். திருமணத்திற்காகிய சுபவேளையில் மணக்கோலத்து டன் புறப்பட்டு கல்யாணப்பந்தலை யடைந்தார். அவ் வேளையில் பரமசிவன் தமது அன்பராகிய சுந்தரரை ஆட்கொண்டருளத் திருவுளங் கொண்டு ஒரு வயோதி பப் பிராமணவேடந்தாங்கி, அப்பந்தரின் கண்ணே வந்தருளி நின்று, "எனக்கும் நம்பியாரூரர்க்கும் ஒரு வழக்குண்டு அதை முடித்துக் கொண்டே உம்முடைய திருமணத்தைச் செய்வேன். அவ் வழக்கைச் சொல் லும்" என்று கேட்க அந்தப் பிராமணர் சபையோ ரைப் பார்த்து; இந்தத் திருநாவலூரனுகிய நம்பியாரூ ரர் எனக்கு அடியவன்" என்று கூறிப், பாட்டனுர் எழு தித் தந்த மூலவோலை இதோ இருக்கிறது என்று காட்டியருளினுர்.

வளர்ச்சி 8 ம் பக்கம்

உ
திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லாமர னாமமே
சூழ்க வையகமுந் துயர்தீர்கவே.

திருச்சிற்றம்பலம்


# இந்துசாதனம்

ருதிரோற்காரி௵ ஆவணி மீ
5, 12, 19, 26-8-83 வெள்ளி


## வல்வினை தீர்க்கும் மாமருந்து

வைத்திய நெறி ஒன்று இருந்து வருகின்றதென்றால் நோய் வாய்ப்படும் நிலைமையும் அத்துடன் கூட உண்டு என்பது பெறப்படும்.

பிணிகள் பல வகையின. உடம்பினுறு நோய் ஒரு விதம்; உயிருடன் மேவுவது இன்னொரு வகை.

நோயும் நோய்க்கு மருந்தும் என்று சொல்வதின் நுணுக்க உண்மையை உற்று நோக்கினால் உயிரினம் பிறப்பெடுக்கும் நோக்கத்தை உணர முடியும்.

தேகத்திலுறும் நோய்களுக்கெல்லாம் மருந்து வகுக்கும் வைத்திய நிபுணர்களும் பிணி வாய்ப்படுபவர்கள் ஆகையால் அன்னாரின் ஆற்றல் கட்டுப்பாட்டுக்குள்ளது. அந்தக் கட்டுப்பாட்டை கிகழ்த்துபவரே உண்மையான வைத்தியநாதன்.

மக்கள் எவ்வித பிணியாலேனும் பாதிக்கப்படும் பொழுது உலகியல் வைத்திய முறையுடன் பர இயல் மருத்துவத்தையும் நாட வேண்டும் என்பது தெளிவாகின்றது.

இந்த நெறியைச் சமய குரவர்கள் நன்குதெளிந்து திருமுறையிலே எங்கள் சிந்தைக்குரியதாய்ச் சொல்லியிருக்கின்றனர்.

சூடரோடு துடக்கிமுடக்கியிட ஆற்றேனென்று சூலை நோயுற்ற மருணீக்கியார் இடபாரூடரை நோக்கியபொழுது உன்னைக் கைவிடமாட்டேன் என்று உமையொருபாகனார் கூற்றுயினவாற்றினை நீக்கியருளினார். அப்பர் அடியாரின் அந் நிலையை நாம அனைவரும் அடைய வேண்டும்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் சுலபமாக நோய்கொடிக்கு ஆய வழி காட்டியிருக்கின்றார்.

"வலங்கொள் வாரவர்
தங்கள் வல்வினை
தீர்க்கும் மருந்து"

என்று பாடிய குரவர் எம்மையெல்லாம் கலங்க வேண்டாம் என்றுதானே ஊக்குவித்திருக்கின்றார்.

வல்வினை தீர்க்கவல்லது நல்வினை. நல்வினை நெறிப்படுபவருக்குச் சொல்லும் செயலும் அவற்றுக்குரிய சிந்தனையும் சிவன் பாலே அமைந்தன ஆகும்.

நோய்க்கு மருந்து செய்யும் பொழுது மேலும் நோயுறாது தடுக்கும் நெறியையும் உலகியல் வைத்தியர்கள் கூறுவது போலத் தெய்வநெறியிலும் மதியுரையாகத் தேவாரதிருவாசகத் திருமுறைகள் அமைந்திருக்கும் வண்ணமையை நாம் உற்று நோக்குதல் வேண்டும்.

வினையுற்று மன வருத்தம் தன்னைக் கொண்டிருக்கும் மக்களுக்கு மருந்துண்டு. சமயம் காட்டும் கை உதவியாம் அம்மருந்தினை நாங்கள் தேடி அருந்த வேண்டுவதன்றி வேறுவழியுண்டோ?

வெந்துயர் தீர்ப்பது நீறு என்பதை வேத வாக்காகக் கொண்டு வருத்தம் தணிக்கும் திருநீற்றினைக் கையுடன் காவலாக வைத்துக்கொள்ள வேண்டும், வைத்திய நிபுணர் எனு சென்றாலும் எப்பொழுதும் மருந்துச் செப்புடனேயே காணப்படுவதைச் சற்று நாம் உணர்ந்தால் எல்லா நோய்க்கும் வல்ல மருந்தான விபூதியை அணிந்தும் அணிவதற்கு வைத்துக்கொண்டும் வாழ்வதின் நன்மையையும் அறிவோம்.

ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்று சொல்லும்பொழுது கோயில் வழிபாட்டுக்குரிய நெறி புனித வாழ்வு என்பது புலப்படும். மனிதன் மனிதனாக விளங்க வேண்டின் புனிதனாக வாழவேண்டும். அது நல்வினையாகும் — வல்வினையைப் போக்கும். அமைதி நிலவும். அச்சம் தவிரும்.

## இறைவன் தடுத்தாட்கொண்ட..........

( 1ம் பக்கத்து வளர்ச்சி )

உடனே நம்பியாரூரர் ஐயரைப் பார்த்து, பிராமணருக்குப் பிராமணர் அடிமையாதலை இன்றைக்கு நீர் சொல்லக் கேட்டோம்; நீர் பித்தனோ என்று சொல்ல ஐயர் "நான் பித்தனானாலும் ஆகுக; நீ என்னைச் சிறிதும் அறிந்திலை இப்படி நின்று விளையாட்டு மொழிகள் பேசவேண்டாம் அடிமைத் தொழில் செய்ய வா" என்றார்- என்பதனை சேக்கிழார் சுவாமிகள் பெரிய புராணத்திலே அழகாகச் சித்திரிக்கின்றார்.

"பித்தனு மாகப் பின்னும் பேயனு மாக நீயின்
றெத்தனை தீங்கு சொன்னா யாதுமற் றவற்றா னுனேன்
அத்தனைக் கென்னை யொன்று மறிந்திலை யாகிநின்று
வித்தகம் பேச வேண்டாம் பணிசெய்ய வேண்டு மென்றார்"

இதனைக் கேட்டு ஆத்திரங் கொண்ட நம்பியாரூரர் பிராமணர் கையிலிருந்த ஓலையைப் பறித்துக் கிழிக்க. ஐயர் சுந்தர மூர்த்தியைப் பிடித்துக் கொண்டு "இது முறையோ என்று சத்தமிட்டார். சபையிலிருந்தோர் இருவரையும் விலக்கி, "ஐயரே நீர் எந்த ஊரில் இருப்பவர்" எனக் கேட்டனர் நான் இருக்கும் இடம் திருவெண்ணெய் நல்லூர்" என்றார். இருவர் வழக்கையும் அங்கேயே பேசித் தீர்த்துக் கொள்வோம்" என்று சுந்தரர் சொன்னார். அங்குள்ள பிராமணர் சபையிலே தனது வழக்கைக் கூறியதுடன் பாட்டனார் எழுதிக் கொடுத்த மூல வோலையையுங் காட்டி வாதிட்டுச் சுந்தரர் தமக்கு அடிமை என்பதை நிரூபித்தார். அப்பொழுது சபையோர் ஐயரைப் பார்த்து நீர் இருக்கும் இடத்தைக் காட்டும் என்று கேட்க "வாருங்கள் காட்டுகிறேன் எனக் " கூறி, சுந்தரமூர்த்தியும் மற்றைய பிராமணர்களும் சிவலாயத்தினுள்ளே போனார்கள். அவரைக் காணாது சபையோர் திகைத்து நின்றார்கள். அன்பு பொங்க அவரை அழைக்கின்றார் நம்பியாரூரர். சிவபிரான் இடபாரூடராய் வெளிப்பட்டு "அன்பனே! நீ முன்னே நமக்குத் தொண்டனாயிருந்தாய். நீ பெண்கள் மீது இச்சை வைத்ததினால் நம்முடைய ஆஞ்ஞையினாலே பூமியிலே பிறந்தாய்; இப்பொழுது துன்பத்தைத் தருகின்ற சம்சார பந்தமானது உன்னைத் தொடராத படி, நாமே வந்து உம்மைத் தடுத்தாட் கொண்டோம்" என்று திருவாய் மலர்ந்தருளினார். நம்பியாரூரர் பெருமானை வீழ்ந்து வணங்கி எழுந்து நின்று "அடியேன் செய்த பிழைகளைப் பொறுத்தருள வேண்டும் என்று இரந்தார்.

அவ்வேளையிலே பெருமான் நாயனாரை நோக்கி' "அன்பனே நமக்கு அன்பினோடு செய்யத் தக்கது பாட்டேயாகும். ஆதலால் எம்மீது தமிழ்ப் பாடல்களைப் பாடுவாயாக" என்று அருளிச் செய்ய நாயனார் கைகூப்பி வணங்கி 'என்ன சொல்லிப் பாடுவேன்' என்று கேட்க "முன்னே பித்தனென்று சொன்னாய் ஆதலாற் பித்த னென்றே பாடு" என்று பெருமானார் அருளிச் செய்தார். பெருமானின் அன்பு தேவாரமாய்க்கனிகின்றது.

பித்தா பிறைசூடி பெருமானே அருளாளா
எத்தான் மறவாதேநினைக் கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்நல்லூர் அருட்டுறையுள்
அத்தா உனக் காளாயினி அல்லேனெனல் ஆமே"

என்னுஞ் சொற்றொடரை முதலாகக் கொண்டு திருப்பதிகத்தினை சுந்தரமூர்த்தி நாயனார் பாடியருளினார். அதன்பின் சிவபிரான் நாயனாரை நோக்கி, தொண்டனே நீ இன்னும் நம்முடைய புகழைக் குறித்துப் பலவகையாகப் பாடு" என்று அருளிச் செய்து மறைந்தருளினார். அன்பு நெறி நின்ற அடியவரான அறுபத்து மூன்று நாயன் மார்களின் நாயகன் சுந்தரமூர்த்தி நாயனார். பெரிய புராணத்தின் தொடக்கம், இடை, முடிபு எல்லாம் சுந்தரமூர்த்தி நாயனாரின் சரித்திரந்தான் கூறப்படுகின்றது.

# சைவ மக்கள்

[ திருமதி அமிதாம்பிகை சதாசிவம் ]

1983 சித்திரையில் கொழும்பில நடைபெற்ற ஆங்கில ஆய்வுக் கட்டுரையின் தமிழாக்கம்

இந்து சமயத்தின் முக்கிய பிரிவுகளான சைவம் சாந்தம், வைணவம் என்பவை தத்தமக்குரிய சிறப்பான சமய' நூல்களையும் வேதங்களையும் முதனூல்களாகக் கொள்கின்றன. சைவசித்தாந்தத்திற்கும் அகச் சமயங்கள் ஆறுக்கும்இருபத்தெட்டு சைவாகமங்களும் நான்கு வேதங்களுமே முதனூல்களாகும. காசியில் வழங்கும் சைவத்திற்கு சிறப்பான கோட்பாட்டு நூல்களுண்டு. தென்னிந்தியச் சைவத்தின் சமயச் சடங்குகளுக்கும் கோவில் வழிபாட்டிற்கும் இருபத்தெட்டு சைவாகமங்களே ஆதார நூல்களாம். தென்னிந்தியச் சைவம் வேதங்களும் ஆகமங்களும் சிவனார் திருவாக்குகளே என்று மதிக்கின்றது. மெய்கண்டார் அருணந்தி, மறைஞானசம்பந்தர், உமாபதி ஆகிய சைவ சமயச் சந்தான குரவர்கள் தமிழில் ஆக்கிய பதினான்கு சாத்திரங்கள் சைவசித்தாந்தக் கோட்பாட்டு நூல்களென்றே மதிக்கப் படுகின்றன. இத் தொகையில் இரு நூல்கள் மெய்கண்டார் காலத்திற்கு முற்பட்ட இருகுரவர்களால் ஆக்கப்பட்டவை. திருக்கைலாசத்தில் எழுந்தருளிய அகச் சந்தான குரவர்களுள் ஒருவரான பரஞ்சோதியார் மெய்கண்டாருக்கு ஞான தீட்சை செய்து ரௌரவாகமத்திலுள்ள பன்னிரண்டு சுலோகங்களை தமிழாக்கம் செய்யும்படி பணிக்க மெய்கண்டாரும் குரு சொற்படி தவறாது பன்னிரு சூத்திரங்கள் கொண்ட சிவஞான போத மென்னும் சைவ சித்தாந்த நூலை யாத்தார் என்று சொல்லுவது மரபாகும். பன்மொழிகள் கண்ட இந்துசமயம் மொழிக் கட்டுப்பாடுகளைக் கடந்து பன்மொழிகளைச் சார்ந்த தத்துவஞானிகளின் கருத்துகளிலே ஒருமைப்பாட்டைக் காண முனைகிறது. வடமொழிச் சைவாகமக் கருத்துக்களிலும் தமிழ்மொழிச் சைவ சித்தாந்தங்களிலும் ஒருமைப்பாடு காணகின்றது சைவ மரபு. தமிழ்மொழியிலுள்ள சைவசித்தாந்த சாத்திரங்கள் வழி நூல்களோ புடைநூல்களோ அல்லவென்றும் தனி முதனூல்களென்றும் சில அறிஞர்கள் சொல்கின்றனர்.

சங்கவிலக்கியங்களிற் காணப்படும் தத்துவக்கருத்துகளை ஒன்று சேர்த்து அவைகளை சைவசித்தாந்த சாத்திரங்களின் தலையாக விளங்கும் சிவஞானபோதக் கருத்துக்களோடு ஒப்பிடுவது ஆய்வுக்கு பெரிதும் பயனளிக்கும். அறிவாளிகளில இன்னொருசாரார் வடமொழிச்சைவாகமங்களெல்லாம் முன்பொருகால் வழக்கிலிருந்து அழிந்த தமிழ்மொழிச் சைவாகமங்களின் மொழிபெயர்ப்பென்று வாதாடுவர். நடுநின்று ஆய்வோர் இக்கருத்துக்களையெல்லாம் அலசியாய்ந்து தமிழ் மொழிச்சைவாகம முதனூல்களிருந்தனவா என்பதற்கு தக்கவாதாரம் உண்டா என்பதை நுணுகியணுகிக் கூறவேண்டிய கடப்பாடுடையவர். இககட்டுரையைப் படிக்கும் போது தமிழ்கூறும நல்லுலகிற்கு மட்டும் சிறப்பாகவுள்ள சில சமயக்கிரியைகள் ரௌரவாகமத்தில் இடம்பெற்றுள்ளதை அவதானிக்கலாம்.

மெய்ப்பொருள் காணும் ஒரேநோக்குடன் இருமொழியிலுமுள்ள சைவ நூல்களை ஆராய்வது மிகவும் பொருத்தமாகும. வடமொழிச் சைவாகமங்களைப்படிக்கும் போது, (A) சொல்லாட்சி (B) யாப்பு (C) சமயச் சடங்குகள் (D) தெய்வங்கள் (E) வழிபாட்டுப்பொருட்கள் முதலியவற்றிற்கு முக்கியவிடங் கொடுத்து நுட்பமாகக் கற்றால் ஆய்வுக்கு பயன் தரும் பலவுண்மைகள் புலப்படும். பழந்தமிழ்' நூல்களிலும், தமிழ்க் கல்வெட்டுக்களிலும, புதைபொருள்களிலும, தெளிவாகும் பழந்தமிழர்களுடைய சமயக் கருத்துக்கள், பழக்க வழக்கங்கள சமயச் சடங்குகள் என்பவற்றோடு வடமொழியாகம ஆய்வுகளை ஒப்பிட்டு நடுநின்று நோக்கினால், பலவுண்மைகள் புலப்படும். சைவசமய குரவர்கள் அருளிய திருமுறைகளிலே தத்துவக்கருத்துக்களையும் கோவில வழிபாட்டு முறைகளையும் பரக்கக் காணலாம். தமிழ் மொழியிற் காணப்படும் சித்தாந்த சாத்திரங்களுக்கு முற்படவெழுந்த தேவாரக் கருத்துக்கள் சித்தாந்த சாத்திரக் கருத்துகளுக்கு முன்னோடிகளா?

துறவு வாழ்க்கையை மையமாகக் கொண்ட சிலசமயங்கள் சமய வாழ்விற்கு இல் வாழ்க்கை இடையூறென்று மதிக்கின்றனவென்பதை இந்நிலையில்மனத்திற கொள்ள வேண்டும். சைவ சமய குரவருள் ஒருவரான சுந்தரமூர்த்தி நாயனார் திருவாய் மலர்ந்தருளிய திருப்பாசுரம் ஒன்றில "இம்மையே தரும் சோறும் கூறையும் அம்மையே சிவலோகம் ஆள்வதற்கையுறவில்லை" என்றும் கருத்துப் படப்பாடி உலகவாழ்வையும் இறைவாழ்வையும் இறை வழிபாட்டாற் பெறலாமென்று வலியுறுத்துகிறார். ஒருவரைவிட ஏனைய அறுபத்திரண்டு சமயகுரவர்களும இல்லறத்தார்கள். இல்வாழ்வு சமய வாழ்விற்கு தடையானதன்று, முதற்படியாக உறு துணையான் தென்னும் நன்னோக்கு சைவாகமத்திலும் பிரதி பலிக்கக் காணலாம். சினும் சத்

( வளர்ச்சி 3 ம் பக்கம் )

வண்ணை- சாந்தையர்மடம்
ஸ்ரீகற்பகவிநாயகர் கோவில்

## இராஜ கோபுர மகா கும்பாபிஷேகம்

எல்லாம் வல்ல விநாயகர் திருவருளால் புதிதாக நிர்மாணிக்கப்பெற்ற இராஜகோபுரத்தின் மகா பாபிஷேகம், நிகழும் மங்களகரமான ருதிரோற்காரி ஞூ ஆவணி மீ 24ந் திகதி (9-9-83) வெள்ளிக்கிழமையும், அத்த நட்சத்திரமும், அமிர்த சித்த யோகலக்கினத்தில் நடைபெறும்.

### அலங்காரத் திருவிழா

வண்ணை -- சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் அலகார உற்சவம் நிகழும் ருதிரோற்காரி ஞூ ஆவணித்திங்கள் 26ம் நாள் (11- 9-83 ஞாயிற்றுகிழமை முதல் (25 9-83) ஞாயிற்றுக்கிழமை வரை 15 நாட்கள் உற்சவம் நடைபெறும்

### இலட்ச்சார்ச்சனையும் மணவாளக் கோலமும்

•••○○•••

யாழ். வண்ணை கில்லர் ஒழுங்கையிற் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் அருள்மிகு மகாமாரி அம்பாளுக்கு இம் மாதம் 24ந் திகதி சனிக் கிழமை இலட்சார்ச்சனை ஆரம்பமாகி தொடர்ந்து 10தினங்கள் நடைபெறும். 10 ம் நாள் 3-9-83 திங்கட்கிழமை பகல் அம்பாளுக்கு அஷ்ட்டோத்திர சதசங்காபிஷேகமும் அம்பாள் வீதியுலாவும், இலட்சார்ச்சனைப் பூர்த்தியும் நடைபெறும்.

—•—

### துர்க்கா பரமேசுவரி

( 1 ம் பக்கத்து வளர்ச்சி )

அடியார்கள்என்றுமில்லாதவாறு இம்முறை கூடச் சொல்லாமற் கற்கிலைகள் போற் கிரியைகளைப் பார்த்தவண்ணம் விளித்திருந்தனர்,

ஓமாக்கினி வளர்ந்தது; உமையம்மையைத் துர்க்கா பரமேசுவரியாக உள்ளத்தமைத்து உலகம் உய்ய ஒவ்வாதன யாவும் ஒழிந்து செம்மை நெறி செறிய ஆயிரம் ஆயிரம் அடியார்கள் நமஸ்காரம் நமஸ்காரம் என்று அடிபணிந்து நின்றனர். அந்தணர் வேதை செந்தழல் சிராக்கினர். இசைக்கலைஞர்கள் சுற்றில் ஏழிசை அமைத்தனர். திருமுறைப் பாராயணம் நிகழ்ந்தது.

கொந்தளிக்கும் மனிதர்களின் சிந்தை குவிந்தது திருவருளைத் தேடி.

## LORD GANESHA..

(Contd from page 4)

curtents of the mind and the body become harmonized; and if after that strong connection is made he should falter on the spiritual path, he has gained divine protection, But he loses one thing. He loses his free will. It is lost, Yet, it is not a great loss. Man's own personal will, his free will is a feeble and insignificant force when compared to Lord Ganesha's will.

( வளரும் )

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் ஈட்டு வழக்கில்

## விற்பனவு அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு இல. 14940

1. உடுப்பிட்டி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் பதி, இல. யா/ 1559 உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை - வழக்காளி

எதிராக

1. சண்முகம் மகாலிங்கம் 2, சண்முகம் அருணாசலம்
3. மயிலுகந்தையா - கம்பர்மலை, உடுப்பிட்டி

எதிராளிகள்

மேற் குறித்த வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன் கீழ் விபரிக்கப்பட்டிருக்கும் ஆதனத்தை 1983ம் வருடம் ஐப்பசி மாதம் 6ம் திகதி வியாழக்கிழமை (6-10 83) முற்பகல் 9 மணி தொடக்கம் குறித்த ஆதனத்திடமாகவிருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### ஆதனடாப்பு.

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி உடுப்பிட்டிக் கோவிற்பற்று வல்வெட்டிக் குறிச்சியிறை ''மரக்குமராயன் தோட்டம்'' நி.பர 8½ எல்லை கிழக்கு முருகர் வயிரமுத்துவின் உரிமைக் காரருக்கும் மறு பேருக்குமுரிய வாதனம், வடக்கு சின்னத்தம்பி பெண் வயிரவிப்பிள்ளையின் உரிமைக் காரருக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம், மேற்கு தெரு, தெற்கு றேட், இவ்வெல்லைக்குட்பட்டவை யடங்கலும், சொரியலாய் 105/512 பங்கும்.

(மதிப்பிட்ட விலை ரூபா. 5250-00

| | | |
|---|---|---|
| 1. | தீர்வைத் தொகை — — | ரூ. 2256 35 |
| 2. | வட்டி ரூபா 1490/- க்கு 6% படி 12-3-1979 தொடக்கம் 25-8 79 வரை வட்டி 5 மாதம்) | 37-25 |
| | | 2293-60 |
| 3. | வட்டி ரூபா 2293/- க்கு 9% படி 24-8-79 தொடக்கம் 6 10 83 விற்பனவு வரை (வட்டி 4 வரு. 1½ மாதம்) | 851-25 |
| 4. | செலவு — — | 396-15 |
| | மொத்த ரூபா | 3541-00 |

க. நல்லலிங்கம்
மாவட்ட நீதிமன்ற விற்பனவு ஆணையாளரும் விலை மதிப்பாளரும்.

சிவலிங்க நிலையம்,
வி. எம். றோட்
பருத்தித்துறை.

## நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் - ஈட்டுவழக்கு இலக்கம் 15776 —

பேதுருப்பிள்ளை சின்னத்தம்பி, புலோலி தெற்கு, புலோலி - வழக்காளி.

எதிராக

கணபதிப்பிள்ளை வீரபத்திரபிள்ளை - எதிராளி

மேலே குறித்த வழக்கில் 1982 ஆண்டு பங்குனி மாதம் 18ந் திகதி தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்கு 1983ம் ஆண்டு ஆடி மாதம் அனுப்பப்பட்ட கட்டளையின்படியும் இதன் கீழ் விபரிக்கப்பட்டிருக்கும் ஆதனம் 1983 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 3ந் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் ஆதனுள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

தீர்வை விபரம்: குறித்த எதிராளி, வழக்காளிக்கு ரூபா 3730 / ம் மேலும் ரூபா 2500/ க்கு வருடம் ஒன்றுக்கு 10 வீத வட்டி வழக்கு அணைத்த திகதியாகிய 30 12 1980 ல் இருந்து தீர்வைத் திகதியாகிய 18 3-1882 வரையும் அதன்பின் சேர்ந்த முழுத்தொகைக்கு அத்தொகை இறுக்கப்படும் திகதிவரை 10% வீத வட்டியும் வழக்குச் செலவு ரூபா 736 / 45 சதமும்.

### ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி பருத்தித்துறைக் கோயிற் பற்று வென்றிப்பாகு தேவன் குறிச்சியிலைற ''ஓடை'' இதற்கு யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோடு 143?P ம் இலக்க பிரிவிடல் வழக்குக் கடைசித் தீர்வையோடணைக்கப்பட்டதும் உலாந்தாமேஸ்தர் தா. சுப்பிரமணியத்தால் 1943 ம் ஆண்டு பங்குனி மாதம் 7ம் ம் திகதி 763 ம் இலக்கத்தில் விஸ்தரிக்கப்பட்டதுமானபடத்தின்படி நிலப்பரப்பு 14, குளி $6\frac{27}{32}$ இதில் குறித்த படத்தில் 2ம் இலக்கத்துண்டுக்கு நிலப் பரப்பு 2, குளி $2\frac{58}{32}$ எல்லை கிழக்கு கந்தையா பெண் உமையாத்தைக்கும் மறு பேருக்குமுரிய ஆதனம். வடக்கு சாம்பாணர்பெண் தெய்வானைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். மேற்கு குறித்த படத்தில் 1ம் இலக்கத்துண்டு. தெற்கு குறித்த படத்தில் 3ம் இலக்கத்துண்டும், 4ம் இலக்கத்துண்டின் முகப்பும் இவ் வெல்லைக்குட்பட்ட நிலம் பனைகள் முழுவதும், வழிப்பாவிப்புக்காக விடப்பட்ட 4ம், இலக்கத் துண்டைப் பாவிக்கும் உரித்தும் நீதிமன்றத்தால் ஏற்கப்பட்ட மொத்த விலைப் பெறுமதி ரூபா 7689 -- சதம் 24.

குறிப்பு- எதிராளி குறித்த காணியில் விற்பனவை நிற்பாட்டுவதாகஇருந்தால், நீதிமன்றக் கட்டளையுடன் ஆணையாளரின் செலவுத் தொகையும் விற்பனவுத் திகதிக்குமுன்னர் ஆணையாளரிடம் கொடுக்கவேண்டும்.

''இகிரி ஒழுங்கை''
தம்பளை,
பருத்தித்துறை,
5-7-1983.

ஆ. க. சதாசிவம்பிள்ளை
மாவட்ட நீதிமன்ற விற்பனவுக் ஆணையாளர்,
7, 1 / 135,

### சைவ மக்கள் ( 2 ம் பக்கத்து வளர்ச்சி )

தியாகிய பவானியும் ஒன்றிணைந்து திருமண வாழ்க்கைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக வுள்ளனர். துறவிகளுக்கு மட்டும் பயன் படும் சமய மாகாது. அவர்கள் உட்படசமுதாயத்திலுள்ள அனைவரும் பின்பற்றக் கூடிய வாழும் சமயமாக ஆகமச் சைவம் இருந்து வந்துள்ளது.

( வளரும்)

## ஈட்டு வழக்கில் விற்பனவுக்கான அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில்

புலோலி தெற்கு பருத்தித்துறை வயிரவநாதன் மாணிக்கராசா வழக்காளி

இல. ஈடு 159/69.

எதிராக

1. அல்வாய் தெற்கு அல்வாய் முருகேசு- வல்லிபுரம்
2. பெண் செல்லாச்சிப்பிள்ளை
3. புலோலி தெற்கு புலோலி கணபதிப்பிள்ளை நடராசா
4. பெண் சரஸ்வதி.

எதிராளிகள்.

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த விற்பனவுக்கான அதிகாரப்படியும் இதன் கீழ் விபரிக்கப்படு மாதனம் 1983ம் ஆண்டு ஐப்பசி மாதம் 5ம் திகதி புதன் கிழமை காலை 10. 00 மணி தொடக்கம் குறித்த காணியிடமாகயிருந்து என்னால் பிரசித்த ஏலத்தில்

### ஆதனடாப்பு.

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி கட்டை வேலிக் கோயிற்பற்று அல்வாய் பெருமியார் குறிச்சியிறை ''அளகஞேடை'' நி. ப. 223/8 ஷை தோட்டம் 2. அளவின்படி நி ப.26 குளி 3. 4 /353 கிணறும் எல்லைகிழக்கு ஒழுங்கை வடக்கு மாலி சந்தை வரதராஜப்பிள்ளையார் கோவிலாதனம். மேற்கு முருகேசு கந்தையாவிற்கும் மறுபேருக்கு முரிய வாதனம் தெற்கு கந்தன் கணபதிப்பிள்ளைக்கும் கந்தையா நடராசாவுக்குமுரியவாதனம் இவ்வெல்லைக்குட்ப்பட்டவைகளிற் சொரியலாய் (110/117) நூற்றுப்பதினேழில் நூற்றுப்பத்துபங்கும். முற் பதிவு பருத்தித்துறை A 581/150

மேற்குறித்த ஆதனம்குறித்த 3ம் 4ம் எதிராளிகளுக்கு 1976 ம் ஆண்டு புரட்டாது மாதம் 11ம் திகதி நொத்தாரிஸ். இ. சதானந்தன் முகதாவில் 2485ம் இலக்க ஈட்டுறுதிப்படி ரூபா 3000/ – க்கும் அதற்கு 18% வட்டிக்குமாக முதல் ஈடாகக் கட்டுப்படுத்தப் பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | தீர்வைப்படி தொகை | ரூபா. 12, 800-00 |
| 2. | முதல் ரூபா. 8000/ – க்கு வழக்குவைத்த திகதியிலிருந்து திர்வைத் திகதி 9-:- 9 1 தொடக்கம் 11. 11. 82. வரை 2 % | 2560-00 |
| | | 15,360-00 |
| 3. | 11-11-82 தொடக்கம் 5-10-83 வரை ரூபா 15360/- க்கு 10% | 1 52-00 |
| | | 16,512-00 |
| | வழக்கு செலவு | 1087-95 |
| | | 17,599-95 |
| 4. | ரூபா. 3000/– க்கு 1 -9-76 தொடக்கம் 5-10-83 வரை 18% வட்டிக்கு முதலீடாகக் கட்டுப் படுத்தியபடியால் 3ம் 4ம் எதிராளிகளுக்குப் போக வேண்டிய தொகை | ரூபா. 6825-60 |
| | | 24,424-95 |

நீதி மன்றத்தால் ஏற்கப்பட்ட மொத்த விலைப் பெறுமதி ரூபா. 1, 92, 000/–

''உமாபதி''
நெல்லண்டை றோட்
தம்பளை
பருத்தித்துறை
31- 7- 1983

R .S. இராமநாதன்.
நீதிமன்ற விற்பனவு ஆணையாளர்,
விலைமதிப்பாளர்,
பிரசித்த ஏலவிற்பனையாளர்
Commissioner of Sales
Valuer & Public Auctioneer

HINDU ORGAN
Fri. 5, 12, 19, 26-8-83

## CHALLENGE to CULTURE

By culture what is commonly meant is the intellectual development of an organized social group. Enlightened persons, or those possessing a good understanding are described as intellectuals. Hence the progress of the people is usually measured by their cultural greatness.

Progress is the criterion by which the culture of a people is judged. If no development in the social life of the persons composing a nation is discernible then it would be said that there has been no progress of civilization. In such a state of affairs, the cause for it has to be examined. It may be that not only there has been no progress but also there has been deterioration threatening further decline and fall. That then is the present situation which throws a challenge to culture.

How could such a situation arise when the great Religions of the world are still alive! Perhaps Religion also stands challenged!!

History has recorded the fall and decline of many a civilization; but there has always been a re-awakening. The whole world is facing this major crisis. And unless Religion makes a determined bid to re-awaken the people to a sense of sane thinking the moment of danger cannot be met with confidence.

Thus it would be clear that Religion alone could be the means of deliverance from sin and its terrible consequences. How then can Religion be made use of to effect the saving of the soul of the people!

Traditional Religious literature has it on record that through the ages the deliverance has been effected either in individual cases or in collective groups. Prayer and penance have been the sure remedies.

God-consciousness has to be realized for a solemn request to be made to the Supreme Authority, the object of worship.

What remains now to be practised is this exercise in religious thought.

## Essence of SAIVA SIDDHANTA

*(By M. Eliathamby, B. A.)*

*(contd from our last issue)*

(God's Grace) assumes three states, namely Jnana Sakthi, Kriya Sakthi and Ichcha Sathi. Siva with the Jnana Sakthi assumes the formless state, with the Jnana Sathi and Kriya Sakthi in equal degree assumes the state called "Maheswaran" which is 25 in number. Sathi causes activity and is called Adi Sakthi. This Sakthi grants worldly enjoyment to the souls to reduce their Anava Malam (Egoism). When performing such action it is called 'Thirothana Sathi'. When it bestows its compassion for the redemption of the souls, it is called Aarulsathi

Ichcha Sathi reduces the power of the Aavam in order to grant the divine experience. Kriya Sathi affords the physical body, mental faculties, the world and the objects of enjoyment, according to the Karma (past actions) performed by the soul in its previous births. Jnana Sathi adopts useful devices to reduce the power of Anavam to grant divine experience. Sathi which is the Grace of God, though one, in varied forms causes the evolution of the Universe and for the cosmic dance of Siva performed for the redemption of the souls to liberate themselves from rebirth. God creates the Universe by His will or 'Sankalpa' through Sathi. His creation has a purpose. He provides the souls with the body, faculties, worlds and objects of enjoyment to reduce the force of anava which is an uncreated self-existing encrustation of the soul.

God does not take any form when He performs the five acts of Evolution, Existence, dissolution life experience (Thiropavam) and bestowal of Grace (anugraham). He causes changes in the Universe. He does not change like time

Sathi and Vindhu denote one and the same. Sathi always causes activity. Siva causes divine knowledge. God transcends all objects which could be pointed to and perceived with the eyes. He is without beginning or end. He is an embodiment of jnana. He can assume any Form

# LORD GANESHA

## — A LUCID EXPOSITION

By Mrs. R. R. Navaratnam, M.A.

The three pillars of Hinduism, the SatGuru, the Temples and the

He likes by mere thought (sankalpa)

This world is perceived by the senses. Though God is imperceptive yet we believe His existence through inferential knowledge and through the holy utterance of those who had attained Divine knowledge. He is to be realised intuitively by the souls. The world consisting of things distinguishable as he, she and it is subject to the process of evolution, existence and involution. Therefore it is an eternal entity evolved by a supreme power out of a pre-existing substance, the premordial matter called in Tamil, Maya. This premordial matter being inert, invisible and unintelligent cannot manifest itself in a material form like the world. Therefore a creator is necessary. God, the absolute spiritual reality and indweller of the two realms of spirit and matter, is the Creator.

The world which is dissolved is reproduced from that into which it had been dissolved. It will become dissolved in the Lored of dissolution, as the Lord of preservation (Vishnu) and Evolution (Brahma) will be dissolved in the Lord of dissolution. Therefore Lord Siva is Supreme. The souls on dissolution remain with Him and the world dissolved rest in Him. He is beyond the material destruction of form and no form. He has no finite quality. Its form is bliss. It is above the reach of the perverted and It is the final Goal of the right-minded. It is self-effulgent. The 8 attributes of God are Pure intelligence. Infinite Grace, absolute purity (free from malam) infinite intuitive wisdom, Infinite power, omnipresence, Infinite Bliss and Independence

After creating the Universe consisting of bodies, faculties, world and objects of enjoyment for the souls. God is immanent in them and transcendant. He is above the 36 powers of the soul. God, the supreme absolute is one. God is the source of all activity and nothing will move without Him.

*(To be continued)*

Scriptures, together echo the greatness of the Great God Ganesha. For untold centuries our rishis and sages have proclaimed the profound depths of the mind, assuring us that we too can and must come to know the Gods. It is the living presence of the SatGuru and his spoken teachings which bring to life the traditional practices and philosophy of Hinduism. We offer in this section a number of excerpts from the discourses and writings of Gurudeva. Master Subramuniya, on the nature of Lord Ganesha and his worship We have brought together material from several published and unpublished talks as well as from the San Marga Master Course.

This first ubadesha explains the nature of Lord Ganesha, what He is like what functions He performs and how we may make Him part of our life. Reference is made in this talk to three world of existence They are the First World of material existence. where we live in physical bodies, the Second World where the souls take on astral or mental bodies and the Third World where the great Gods such as Lord Ganesha, are. Let us now enjoy the profound insights of Master Subramuniya as he describes from an inner perspective the nature and functions of Lord Ganesha. Aum Ganesha! Once we gain a psychic connection with Lord Ganesha, the Hindu Deity manifesting in a multitude of forms including the elephant-headed Lord of Categories and Remover of obstacles, we are brought fully into the Hindu religion. Hinduism has no founder. It is perhaps the only living religion on the planet that does not look to a human founder for its source of inspiration, scripture or historical beginning. It is timeless and ageless. Hinduism looks inward for its origin and guidance to the subtle super-conscious realms within the microcosm which is calls the Third World. It has no single organized material plane hierarchy Who then is in charge of Hinduism? Lord Ganesha! He doesn't live in Rome, as the Pope does. He lives simultaneously every where Hindus worship and pray within themselves. He doesn't have to be reappointed, because yugas and yugas ago He was permanently appointed when He was created for this work. He is the gateway into this most ancient faith on the planet, the inner authority, the guardian granting access to all of the grand inner, spiritual mysteries of Hinduism. All Hindus worship Lord Ganesha regardless of their sectarian positions. He is both the beginning of the religion and the meeting ground for all Hindus— and that is only proper inasmuch as He is the personification of the material universe. The universe in all of its varied and various magnificent manifestations, is nothing but the body of Lord Ganesha.

Ganesha sits on the psychic lotus of the Muladhara Chakra, the the ganglia of nerves at the base of the spine of man which governs time, matter and memory As the aspirant is lifted into conscious awareness of the Muladhara Chakra he encounters the Holy Feet of Lord Ganesha. And as he worships Lord Ganesha, he slowly enters the Hindu religion. Once this connection is firmly established, all of the

(contd. in page 3)

[illegible]

*Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna. at their Saiva Prakasa Press 450, K. K S. Road, Vannarponnai, Jaffna. (Telephone: No. 22356) on Friday, 5, 12, 19, 26-8-83*
Editor in Chief:
R. N. Sivapirakasam

